RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s205

OPEN ACCESS

# உடையார் புதினம் காட்டும் இராஜ ராஜனின் குடும்ப - உறவுகள்

**பா. மரகதம்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா.

# Rajarajan's Family and Relationships in Udayar Novel

**P. Maragatham** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli-620022, Tamil Nadu, India

* Corresponding Author: maragathamsvga@gmail.com

Received: 20-06-2022
Revised: 29-09-2022
Accepted: 13-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Rajarajan's family mentioned in literature is praiseworthy. Sembiyan Mathevi, the wife of Kandarathithar, came as the daughter-in-law of the Chola dynasty and lived unitedly in the same palace, looking after her husband, his brother Sundara Chola, and his wife Vanavan Mathevi. Any event that took place during the reign of Sundara Cholar and the successors Uttama Chola and Arulmozhivarman would be reported to Sembiyan Mathevi and her opinion would be heard and acted upon. Sembian Matheviyar was a great old woman in that palace. Arinjaya Chola's son, Sundara Chola, who was called Parantha II, raised his children carefully. After Sundara Chola, he said who should come to the throne. He has the right personality and skills. It is evident from the novel that the wives of Uttama Chola have acted as good daughters-in-law in obedience to the mother-in-law, Sembiyan Mathevi. Apart from that, it is also known through the book that Rajarajan's wives also treated Sembiyan Mathevi with respect and dignity. Kundavai Devi, who grew up under her, is also a powerful woman in the Chola country. Kundavai's younger brother Rajaraja Chola was also a king with a great personality. Along the way, their habits continue. Similarly, Rajendra Chola, the great-grandson of Sembiyan Mathevi, also performed well and ruled the Chola country. Rajaraja's family relations can be understood from this article.

**Keywords:** Rajarajan, Udayar Novel, Sembiyan Mathevi, Family Relations

## முன்னுரை

முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த வாழ்க்கை முறையில் 'உறவுகள்' மிக முக்கியமானது. தொல்காப்பியர் எழுதிய பொருளதிகாரத்தில் தலைவன், தலைவி, நற்றாய், செவிலி, தோழி, பாங்கன் எனப் பல்வேறு உறவு முறைகள் பற்றிக் கூறியிருப்பார். 'குடும்பம்' என்ற வார்த்தையைப் பிரித்து குடு + இன்பம் என்று கூறுவர். குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் அவர் அவர் பங்குக்கு இன்பம்க் கொடுத்து கொண்டே இருக்க வேண்டும். அந்த கால வாழ்க்கை முறையில் 'கூட்டுக் குடும்பங்கள்' அதிகமாக இருந்தது. அதில் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, பெரியப்பா, சித்தப்பா, மாமன், அத்தை, பாட்டி, தாத்தா என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். வீட்டில் ஒரு 'சுபநிகழ்ச்சி' என்றால் அத்தனை பேரும் சேர்ந்து வேலை செய்வார்கள். அது பெரும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த வீட்டில் வளரும் குழந்தைகள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும், சகிப்புத்தன்மையோடும் வளருவார்கள். அப்படி வளர்ந்தவர்கள் தான் பாட்டன், பூட்டி, பாட்டி, தாத்தா எல்லோரும். ஆனால் இன்றோ அப்படிப்பட்ட நிலை இல்லை. தனிக்குடும்பம் தான் அதிக அளவில் உள்ளது. எங்கோ ஒன்றிரண்டு கூட்டுக்குடும்பங்கள் இருக்கிறன. தனிக்குடும்பத்தில் வளரும் குழந்தைகளுக்குக் கதைச்

சொல்வதற்குப் பாட்டி, தாத்தா இல்லை. செல்ல சண்டைப் போட அண்ணன் தம்பி இல்லை. ஒரே பெண்குழந்தையோ, அல்லது ஒரே ஆண் குழந்தையோ தனிக் குடும்பங்களில் வாழ்கிறது. அவர்கள் வளர்ந்த பிறகு சீர் செய்ய தாய்மாமன் உறவு இல்லை. திருமணம் செய்து தாய் வீட்டை விட்டுப் போகும் பெண் குழந்தைகளுக்கு ஆறுதல் மொழி சொல்ல ஆள் இல்லை. முன்பெல்லாம் நாம் இருவர் நமக்கு இருவர் என்ற கொள்கையுடன் இருந்தார்கள். இப்போது நாமே இருவர் நமக்கேன் ஒருவர் என்ற நிலை வந்து விட்டது. இந்நிலை மாற வேண்டும். உறவுகளின் உன்னதம் என்னவென்று இளைய தலைமுறை அறிய வேண்டும். அதற்குக் காலம் கடந்து நிற்கின்ற இலக்கியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதில் சொல்லப்படும் உறவுகளின் முக்கியத்துவத்தை அறிய முற்பட வேண்டும்.

## ஆய்வு அணுகுமுறை

இராஜராஜ சோழன் அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களின் கருத்தைக் கேட்டு, விவாதித்து, நேரத்திற்குத் தகுந்தாற் போல் ஒவ்வொரு செயலையும் செய்பவர். இவர் தம்பியாகவும், பேரனாகவும், தந்தையாகவும், கணவனாகவும் உறவுகள் மத்தியில் மதிப்புடன் வாழ்ந்துள்ளார். ஒவ்வொருவரின் மன அசைவுகளைக் குறித்து ஆழ்ந்துச் சிந்தித்து செயல்பட்டுள்ளார். எனவே இவ்வாய்வு முறை ‘உளவியல்’ அணுகுமுறையைச் சார்ந்தது.

## படைப்புப் பிண்ணனி

பாலகுமாரன் அவருடைய பதினாறு வயதில் இருந்தே சோழர்கள் பற்றித் தேட ஆரம்பித்தார். அத்தேடல் அவருக்குள் ஆழமாகச் சென்று அவருடைய 32 வயதில் வரலாற்றுப் புதினம் எழுத வேண்டும் எனத் திட்டமிட்டு பின் 38 வயதில் எழுதுவதற்கான முயற்சியை மேற்கொண்டு அவரது 60ம் வயதில் ‘உடையார்’ என்ற புதினத்தை எழுதி முடித்துள்ளார்.

## பாட்டி செம்பியன் மாதேவி

செம்பியன் மாதேவி சிவஞான கண்டராதித்தரின் பட்டத்தரசி. இவர் கி.பி.910 முதல் கி.பி. 1001 வரை வாழ்ந்துள்ளார். சித்திரை மாதம் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர். மழவர் குடும்பத்ததைச் சார்ந்தவர். செம்பியன் மாதேவி கணவரைப் போலவே சிவத்தொண்டராக வாழ்ந்தவர். கண்டராதித்தருக்கு இரு மனைவிகள். மூத்தவர் ‘வீரநாரணி’ இறந்து விட்டதால் அவருடைய வயதான காலத்தில் செம்பியன் மாதேவியை மணமுடித்து அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அக்குழந்தைக்கு மதுராந்தகன் எனவும், உத்தம சோழன் எனவும், இரு பெயரிட்டு இருந்தனர். கண்டராதித்தச் சோழனுக்கு பிறகு அவரது மகனே பட்டத்துக்கு உரியவர். ஆனால் மகன் சிறுகுழந்தையாக இருந்த காரணத்தினால் அவருடைய தம்பி அரிஞ்சய சோழன் அரியணை ஏறினார். அரிஞ்சய சோழன் மற்றும் கல்யாணி இவர்களுக்கு பிறந்த இரண்டாம் பராந்தகன் அரிஞ்சய சோழனுக்கு பின் அரியணை ஏறினார். செம்பியன் மாதேவி அவருடைய கணவர் இறந்த பின்பு ‘அரிஞ்சயன்’, சுந்தரசோழன், உத்தம சோழன் ஆகிய மூவேந்தர் ஆட்சி காலத்திலும் வாழ்ந்தவர். முதல் இராஜராஜன் ஆட்சியில் கி.பி.1001 வரையிலும் உயிருடன் வாழந்துள்ளார் (Sadasiva Pandarathar, 2010). அக்காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. உத்தம சோழன் சிறுகுழந்தையாக இருந்த காரணத்தினால் செம்பியன் மாதேவி மகனை வளர்க்கும் பொருட்டே உயிர் வாழந்துள்ளார். உத்தம சோழனை மட்டும் வளர்க்காமல் சுந்தர சோழனுடைய பிள்ளைகளான ஆதித்த கரிகாலன். அருள்மொழிவர்மன். குந்தவை என்ற மூவரையும் பொறுப்புடன் வளர்த்தவர். செம்பியன் மாதேவியிடம் வளர்ந்த முதல் அருள்மொழிவர்மன் சிறந்த பக்திமானாகவும், ஒழுக்க நெறி உடையவராகவும் வாழ்ந்துள்ளார். அரிஞ்சய சோழன் செம்பியன் மாதேவிக்கு ‘கொழுந்தன்’ முறை என்று சொல்லப்படுகிறது. அப்படி அவருக்குப் பிறந்த சுந்தர சோழனது பிள்ளைகள் மூவரையும் வளர்த்துள்ளார். இதனால் இம்மாதரசி பெரிதும் போற்றப்படுகிறாள் சோழ வம்சத்தில். அன்றைய

காலகட்டத்தில் வாழ்ந்த செம்பியன் மாதேவி போல் அன்பு, கருணை பொருந்திய 'பாட்டிகள்' இப்போது வரை இருந்து வருகின்றனர்.

## தாத்தா அரிஞ்சய சோழர்

கண்டராதித்தனுக்குப் பிறகு அரிஞ்சய சோழர்தான் அரியணை ஏறினார் என்பதைச் சில கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. சுதாசிவ பண்டாரத்தாரின் நூலான பிற்காலச் சோழர் வரலாற்றில் இச்செய்தியைத் தெளிவாகக் கூறியுள்ளார். "கண்டராதித்தனுக்குப் பின்னர் அவன் தம்பியும் இளவரசப் பட்டங் கட்டப்பற்றிருந்த அரிஞ்சயன் முடி சூட்டப் பெற்றான். இவனை அரிந்தமன் என்றும் அரிகுலகேசரி என்றும் அந்நாளில் வழங்கியுள்ளனர் (Sadasiva Pandarathar, 2010)."

அரிஞ்சய சோழருக்கு நான்கு மனைவிகள் இருந்துள்ளனர். அதில் 3வது மனைவி 'வைதும்பராயன்' மகள் என்பது அன்பிற் செப்பேடுகளால் அறியப்படுகிறது. அவள் பெயர் கல்யாணி. இவளது மகனே இரண்டாம் பராந்தகன் என்று சொல்லப்படுகின்ற சுந்தர சோழன் ஆவார். இவர் இராஜராஜன் சோழனுடைய தாத்தா. இவருக்காகக் கோயில் ஒன்றையும் எடுத்துள்ளார் இராஜராஜர். இச்செய்தியைச் சதாசிவ பண்டாரத்தார் நூலின் வாயிலாக அறிய முடிகின்றது. "இவ்வரிஞ்சயன் பெயரனாகிய முதல் இராசராசசோழன் வட ஆற்காடு ஜில்லாவில் திருவல்லத்திற்கு வடக்கே ஆறு மைலுள்ள மேற்பாடி என்ற ஊரில் அரிஞ்சயேச்சுரம் என்னுங் கோயில் ஒன்று எடுப்பித்து அதற்கு நிவந்தங்களும் வழங்கியுள்ளான் (Sadasiva Pandarathar, 2010)." இராஜராஜன் அவரது தாத்தாவைப் பார்த்ததில்லை என்றாலும் அவரது வீரச்செயல்களைக் காதால் கேட்டு வளர்ந்தவர். ஆகையாலும் தாத்தாவின் மீதுள்ள பேரன்பினாலும் அவருக்காகக் கோயில் ஒன்றை எழுப்பியுள்ளார்.

## தாய் - தந்தை

"இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழரும், வானவன் மாதேவியும் இராஜராஜனின் பெற்றோர்கள். திருக்கோவிலூரில் இருந்த மலையமான் என்ற சிற்றரசனின் மகள்தான் வானவன் மாதேவி." இவருக்கு மூன்று குழந்தைகள். ஆதித்த கரிகாலன். அருள்மொழிவர்மன். குந்தவை. சுந்தரசோழன். சுமார் 13 வருடம் ஆட்சியில் இருந்தார். ஆதித்த கரிகாலனுக்கு 'இளவரசு' பட்டம் கட்டினார். காஞ்சிமா நகரில் பொன்னால் ஆன ளிகை ஒன்றைத் தந்தைக்காக கட்டினார் ஆதித்த கரிகாலன். மகன் இறந்த செய்திக் கேட்டு துக்கம் தாழாமல் அந்த மாளிகையில் தங்கி உயிர் விட்டார் சுந்தர சோழர். இதன் காரணமாகவே அவர்ப் 'பொன் மாளிகை துஞ்சின தேவர்' என அழைக்கப்படுகிறார் (Rasamanikanar, 2016). அவரது மனைவி வானவன்மாதேவி சுந்தர சோழரோடு உடன்கட்டை ஏறிவிட்டார். ஆட்சி காலத்தில் மக்களை நல்வழியில் கொண்டு சென்றார். இளமை காலத்திலேயே பெற்றோரை இழந்தனர் அம்மூவரும்.

## தமக்கை குந்தவை தேவியார்

குந்தவை அருள்மொழிவர்மனின் அக்கா. சிறுவயதில் இருந்த தம்பியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து ஆளாக்கிய பெருமை இவரையும் சாரும். அக்கா சொல்லுக்கு கீழ்படிவார் அருள்மொழிவர்மன். ஒருமுறை அரசவையில் பேச்சு வார்த்தை நடக்கும் போது ஒருவன் பேசியதை எண்ணி கோபப்பட்டு அந்த நொடியே வாளின் மீது கைவைத்து உருவினார் அருள்மொழி. உடைவாளின் மீது அடிக்கடி கை வைப்பவன் முட்டாள் அவன் பேசியதற்குத் தக்க பதிலை நீ கொடு உன் புத்தியைத் தீட்டு என்று அறிவுரை கூறினார் (Balakumaaran, 2002). இப்படியே தம்பியை ஒவ்வொரு கணமும் பாதுகாத்து சோழ தேசத்தின் சிம்மாசனத்தில் மாபெரும் பேரரசனாக அமர வைத்த பெருமை குந்தவைக்குரியது. அந்நிய நாட்டில் திருமணம் செய்தால் வேறொரு நாட்டிற்குச் செல்ல வேண்டும் தம்பியைப் பிரிய நேரிடும் என்று நினைத்து சோழதேசத்தில் உள்ள வீரன் ஒருவனைக் கரம்பிடித்தார் குந்தவை. அவர்தான் வந்தியதேவர், அருள்மொழிவர்மனுக்கு உற்ற நண்பராகவும் விளங்கினார். இறந்த தாய் தந்தையர்

படிமத்தைத் தம்பி எழுப்பிய தஞ்சை பெரிய கோவிலில் வைத்து நாள் வழிபாட்டிற்கு நிவந்தமாகப் பெரும் பொருட்களையும் வழங்கி உள்ளார். தந்தையின் மீது இருந்த மிகுந்த பாசத்தினால் "வட ஆற்காடு' ஜில்லாவிலுள்ள பிரம்மதேசம் என்ற ஊரில் சுந்தரசோழப் பேரேரி என்னும் ஏரி ஒன்றும் புதுக்கோட்டை நாட்டில் திருமெய்யற் தாலுகாவில் சுந்தரசோழபுரம் என்னும் நகரம் ஒன்றும்" இருந்ததாகக் கல்வெட்டுகளில் குறிப்பு உள்ளதாக திரு. சதாசிவ பண்டாராத்தார் அவரது நூலில் குறிப்பிட்டுளளார் (Sadasiva Pandarathar, 2010). இவ்வாறாக அக்காவாகிய குந்தவை நாச்சியார் அரசியல் நெளிவுசுழிவுகளைத் தெரிந்துக்கொண்டு அதைத் தம்பிக்கும் சொல்லிக் கொடுத்து அவரை மாமன்னராக மாற்றியுள்ளார். தாயை இழந்த அருள்மொழிக்கு பாட்டி செம்பியன் மாதேவியும் அக்கா குந்தவையும் பக்க பலமாக இருந்துள்ளனர். இன்றைய குடும்பங்களிலும் வயது மூப்பின் காரணமாகவோ அல்லது நோயின் காரணமாகவோ தாய் இறந்து விட்டால் அக்குடும்பத்திதல் உள்ள மூத்த மகள் அவளுக்குப் பின் பிறந்த சகோதரர்களை வழிநடத்துகிறாள். அக்கா தம்பி உறவு இன்றளவும் சுமூகமாக தொடர்ந்து வருகிறது.

## சித்தப்பா உத்தம சோழன்

இவர் கண்டராதித்த சோழனுடைய புதல்வன். சுந்தர சோழன் இறந்த பின்பு அருண்மொழிவர்மன் ஆட்சிக்கு வர வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் கூறினர். ஆனால் அருண்மொழியோ தன் சித்தப்பாவிற்கு அரியணை ஏறும் ஆசை இருப்பதைத் தெரிந்து கொண்டு அவருக்கே முன்னுரிமைக் கொடுத்தார் (Balakumaaran, 2002). உத்தம சோழன் கிட்டதட்ட 15 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். பல்வேறு நலத்திட்டங்களைச் செய்தார். அவரது மனைவிகள் பலர். அவர்களது பெயர்கள் 'செம்பியன் மாதேவி' என்ற ஊரில் உள்ள கல்வெட்டுகளில் புலப்படுகிறது (Sadasiva Pandarathar, 2010). அந்த ஊரில் எழுப்பப்பட்டிருக்கும் திருக்கயிலாயம் என்ற சிவன்கோயிலுக்கு ஒவ்வொரு நாள் வழிப்பாட்டிற்கும் மாதங்களில் நடக்கும் திருவிழாக்களுக்கும் பல நிவந்தங்கள் அளித்துள்ளார். இச்செய்தியினால் மாமியாருக்கு மிகுந்த மரியாதை அளித்துள்ளளனர் என்பது தெளிவாகிறது. ஐவரும் ஒற்றுமையுடனும் இருந்துள்ளனர். உத்தம சோழனது மகன் முதல் இராஜராஜ சோழன் ஆட்சியில் கோவில் கணக்குகளைச் சரிவர கவனித்துள்ளார். இராஜராஜனோ சித்தப்பாவை ஆட்சியில் அமர வைத்து விட்டு சோழதேசம் முழுவதும் சுற்றிதிரிந்து தன் அண்ணன் ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் என்று தேடித் தேடி விபரங்களைச் சேகரித்தார்.

## இராஜராஜன் அவரது மனைவியர்

சித்தப்பாவின் ஆட்சிக்குப் பிறகு கி.பி.985ல் அரியணை ஏறினார் அருள்மொழிவர்மர். மக்கள் இவரது அன்பின்பால் வைத்தப் பெயரே இராஜராஜன். இவருக்கு மனைவிகள் பலர் (Sadasiva Pandarathar, 2011). அதில் 15 பெயர்கள் கல்வெட்டில் உள்ளன. பாட்டியினாலும் அக்காவினாலும் வளர்க்கப்பட்டதால் சிவபக்தி, சமயப்பொறை போன்ற உயர் குணங்கள் பலவும் ஓருங்கே அமையப்பெற்றவர். அத்தகையோரது அன்பு கலந்த அறிவுரைகளை நாள்தோறும் கேட்டு வளர்ந்து வந்ததினால் இவர் சைவசமய வளர்ச்சியிலும் சிற்பம், ஒவியம், இசை முதலான கலை வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டுச் சமயப் பொறையுடைவனாய் வாழ்ந்து வந்தமைக்குக் காரணமாயிற்று. பல மனைவிகள் இருந்தாலும் பட்டமகிஷியான உலகமாதேவிக்கு மூன்று பெண் பிள்ளைகளும் இரண்டாவது மனைவியான வானமாதேவிக்கு பிறந்த இராஜேந்திர சோழனும் என நால்வர் இருந்தனர். பஞ்சவன் மாதேவி என்பவர் தன் கருப்பையை மலடாக மாற்றிக் கொண்டவர் என்பதை இந்நூலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார் (Balakumaaran, 2002). எல்லா மனைவியர்களையும் சமமாக மதித்துள்ளார் இராஜராஜன். அவர்களைச் சுதந்திரமாக செயல்படவும் அனுமதித்துள்ளார். தஞ்சை பெரிய கோவில் கட்டி முடித்தவுடன் அதில் "நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும் கொடுத்தார் கொடுத்தனவும்" என கல்வெட்டில் வெட்டியுள்ளார். இதிலிருந்து தன் அக்காவின் மீது இருந்த பெரும் மதிப்பும் மரியாதையும் புலப்படுகிறது. திருவையாற்று ஐயாறப்பரது கோயிலின் வடக்குச் சுற்றில் 'உலோகமாதேவிச்சுரம்' என்ற கோயில் ஒன்றை எடுப்பித்து அதற்குத் தேவையான நிவந்தங்களையும்

வழங்கியுள்ளார் உலோகமாதேவி. அது தவிர ஒவ்வொரு மனைவியும் தஞ்சைப் பெரிய கோவிலுக்குத் தனித்தனியே சிலைகளும் ஆபரணங்களும் நிவந்தங்களும் வழங்கியுள்ளனர் (Sadasiva Pandarathar, 2010).

## மன்னன்-மக்கள் உறவு

காஞ்சிபுரத்தில் இருந்து தஞ்சை பெரியகோவிலுக்கான மாதிரி வரைபடம் தேவரடியார் மூலமாகத் தஞ்சைக்குக் கொண்டு வரப்பபட்டது. அப்போது காவேரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பழமர்நேரி என்ற ஊருக்குக் கரைதாண்டும் போது மாட்டுவண்டி நடு ஆற்றில் சிக்கிக் கொண்டது. அதை மீட்க மக்களும் மன்னரும் பிரம்மராயரும் போராடி பத்திரமாக மீட்டனர். அந்த இரவு நேரத்திலும் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி அச்செயலை செய்தனர். தஞ்சை பெரிய கோவில் கட்டுவதற்கு முன்பு "பாணர்களையும் படகோட்டிகளையும் சுற்றி உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய கனவு என்ன என்பதை விவரிப்பார். அவர்கள் முரட்டுக் கூச்சலோடு மன்னரை வாழ்த்துவார்கள். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்று குரல் கொடுப்பார்கள். உங்களின் வலுவான தோள்கள் வேண்டும் என்று மன்னர் பதில் சொல்வார். 'புரியவில்லையே' என்று அவர்கள் சொல்ல பெருங்கற்களை நீங்கள் தூக்கி வர வேண்டியிருக்கும். எனக்காக அல்ல தென்னாடுடைய சிவனுக்காக என்று சொல்லுவார். ஜனங்கள் மகிழ்ச்சியில் மறுபடியும் ஆரவாரிப்பார்கள்" (Balakumaaran, 2013).

அவரது ஆட்சியில் நிலங்கள் முழுவதையும் அளந்து விளைநிலம் எது, தரிசு நிலம் எது, என்று கணக்கு எடுத்தார்கள். அதில் விளை நிலத்திற்கு மட்டுமே 'வரி' வசூல் செய்தார். அளக்கின்ற வேலையை 2 ஆண்டுகளில் செய்து முடித்தார். 'குடவோலை' முறையை அறிமுகப்படுத்தினார். உறுப்பினர்களுக்கான தகுதிகள் என்ன என்பதையும் குறிப்பிட்டார். அவருக்குக் கீழ் வேலை செய்யும் அனைத்து அதிகாரிகளுக்கும் பட்டங்களும் சலுகைகளும் வழங்கினார். போர் வீரர்களுக்குத் தகுத்கேற்ப கேயூரம் வழங்கினார். பிராமணர்களுக்குப் பிரம்ம தேசங்களை வழங்கினார். சோழ தேசத்தில் எண்ணற்ற ஏரிகளை வெட்டினார். வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான அத்தனை செயல்களையும் செய்தார். வணிகர்களை ஊக்குவித்தார். கிழக்குப் பக்கம் கடற்கொள்ளையர்களை அடக்கி கடல் கடந்து வாணிபம் செய்த வணிகர்களைக் கொண்டது சோழதேசம். அரசாங்க அதிகாரி முதல் சாமனிய மக்கள் வரை அன்பாகப் பழகியவர் இராஜராஜன். அதன் காரணங்களாலேயே இவரது ஆட்சிக்காலத்தை மக்கள் பொற்காலம் எனக் கொண்டாடினார்கள்.

## மகன் இராஜேந்திர சோழன்

தலைச்சிறந்த தந்தைக்குக் கிடைத்த அரிய புதையல் போன்றுப் பிறந்தவர் மகன் இராஜேந்திர சோழன். தந்தை 8 அடி பாய்ந்தால் மகன் 16 அடி பாய்ந்தார். ஏனென்றால் தந்தையால் முடிக்க முடியாத சில செயல்களையும் முடித்துக் காட்டியவர் இராஜேந்திர சோழர். உதாரணமாகப் பாண்டிய நாட்டு மணிமுடியையும் செங்கோலையும் ஈழநாட்டில் ஒளித்து வைத்தனர். தந்தையின் ஆட்சியில் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. ஆனால் மகன் அதை செய்து முடித்தார் (Balakumaaran, 2013). மான்யகேடயத்தை அடித்து நொறுக்கி கங்கை தாண்டி இமயமலை போக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவ்வாசையை மகனாக இராஜேந்திர சோழர் நிறைவேற்றினார். தந்தையிடம் இருந்த எல்லா நற்குணங்களையும் கற்றுக் கொண்டார். தந்தையைப் போன்றே மத்திம வயதைக் கடந்துதான் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார். (தந்தை - மகன்) உறவிற்குச் சிறந்த உதாரணமாய் விளங்கியவர்கள். சிற்றன்னையான பஞ்சவன் மாதேவிக்கு பள்ளிபடைக் கோயில் ஒன்றை எழுப்பியவர் (Balakumaaran, 2013). தாத்தா, அப்பா நிர்வகித்து வந்த தலைநகரை விட்டு தனியான 'தலைநகர்' ஒன்றை உருவாக்கி அதில் மக்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து விட்டு அங்கு குடியேற்றம் செய்தவர். கடல் கடந்து சென்று அங்கிருக்கும் நாடுகளில் புலிக்கொடியைப் பறக்க வைத்தவர். கடலிலேயே மிகப் பெரிய நாவாய்களில் போர் செய்த பெருமை இவரையே சாரும். மொத்தத்தில் தந்தையை விட ஒருபடி மேலேயே புகழை நிலைநாட்டியவர்.

## மகள்களும் - மருமகனும்

இராஜராஜ சோழன் அவருடைய அக்காவின் மீது இருந்த பாசத்தினால் அவருடைய பெண்ணுக்குக் குந்தவை என்று பெயரிட்டார். மற்றொரு பெண்ணிற்குப் பாட்டியின் மீது இருந்த பாசத்தினால் 'மாதேவி' என்று பெயர் வைத்தார். 'மாதேவி' என்பவள் புத்த மதத்தைத் தழுவியதாகச் செய்திகள் சொல்லப்படுகின்றன. குந்தவை என்பவள் மன்னருக்குச் செல்ல மகளாக இருந்துள்ளாள். மிகவும் குறும்பு செய்பவளாகவும் அதிகம் கோபப்படக் கூடியவளாகவும் இருந்துள்ளாள். அவள் கீழை சாளுக்கிய இளவரசனான 'விமலாதித்தன்' என்பவரை காதலித்துத் திருமணம் செய்தவள். ஆட்சிப் பொறுப்பிலும் மக்களிடம் பழகும் விதத்திலும் மருமகன் விமாலதித்தன் சற்றுக் குறைவுதான் என்றாலும் கூட அவரை விட்டுக் கொடுக்காமல் அவரையும் அவரை சார்ந்தவர்களையும் அனுசரித்து சென்றுள்ளார் இராஜராஜர். காரணம் மகள் வாழ்விற்காக எப்பேர்ப்பட்ட 'மன்னராக' இருந்தாலும் சரி குடும்பத்திற்குள் ஒற்றுமை வரவேண்டும் என்றால் விட்டு கொடுத்துதான் செல்ல வேண்டி உள்ளது. இது இராஜராஜருக்கும் பொருந்தும். அவரும் அவரது மகனும் அவ்வாறே சென்றுள்ளனர். குந்தவையின் மகனுக்குதான் இராஜேந்திர சோழரின் மகளைத் திருமணம் செய்தனர். (நரேந்திரன் - அம்மங்காதேவி) இன்றைய காலகட்டத்திலும் மாப்பிள்ளைக்காக எல்லாத்தையும் சகித்துப் போகின்ற 'மாமனார்கள்' உண்டு. அத்தையின் மகனைத் திருமணம் செய்யும் மாமன் மகளும் உண்டு. வழிவழியாக இந்தப் பழக்கம் தொன்றுதொட்டு வருகிறது.

## முடிவுரை

பாலகுமரன் எழுதிய புதினங்களில் வரலாற்றுப் புதினங்கள் சிறப்பிற்குரியவை. மொத்தம் பன்னிரெண்டு வரலாற்றுப் புதினங்களை எழுதி உள்ளார். அதில் பெரும்பாலும் சோழர்கள் பற்றியதே. ஏனெனில் அவர்கள் கட்டிய கோவில்கள் இன்றளவும் அவர்களது பெருமையைப் பறைசாற்றுகிறது. சோழர்கள் கட்டிய கோவில்கள், ஏரிகள், கல்லணை போன்ற முக்கியமான இடங்கள் இன்றளவும் பயன்பாட்டுக்கு உரியவை ஆக இருக்கின்றது. கட்டிடக்கலையின் உச்சம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சை பெரிய கோவில் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் சோழர்களது நாகரீத்தைப் பண்பாட்டை விளக்கிக் கூறுகிறது. சிறுவயதில் இருந்தே சைவ நெறித் தழைக்க அரும்பாடுபட்டவர். ஆட்சி பொறுப்பு ஏற்கும் முன் சோழதேசம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களின் குறைகள் என்னவென்று அலசி ஆராய்ந்தார். பின் அரியணை ஏறியவுடன் அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுதினார். வேளாண்மைத் தொழிலே சோழதேசத்தின் உயிர்நாடி என்று சொல்லப்பட்டது. தரிசாகக் கிடந்த நிலங்களையும் செப்பனிட்டுச் செழுமையான வயல்களாக மாற்றினார்கள் சோழ மக்கள் மாதம் மும்மாரி பொழிந்தது. காவிரி நுரை பொங்க பெருக்கெடுத்து ஓடினாள். வயல்களில் பசுமை படர்ந்தது. சோழநாடு சோறுடைத்தாயிற்று. இராஜராஜனது தாத்தா அரிஞ்சய சோழரால் ஆட்சி செய்யப்பட்ட இடங்கள்த் தாண்டி உள்ள நிலங்களையும் நிர்வகிக்க ஆரம்பித்தார் இராஜராஜர். தாத்தா மற்றும் அப்பாக்கள் காலத்தை விட சோழ தேசத்தை விரிவுப்படுத்தினார். அனைத்து மக்களையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்தவர். எங்கு அமைதியாக இருக்க வேண்டுமோ அங்கு அமைதியாக இருப்பவர். எவ்விடத்தில் ஆவேசம் காட்டவேண்டுமோ அங்கே ஆவேசம் காட்டுபவர். பழகுவதற்கு இனிமையானவர் மொத்தத்தில் குடும்பத்தில் உள்ளவர்களோடு அன்போடும், கனிவோடும், பாசத்தோடும் பழகியவர். அவர்களுடைய கருத்திற்கு முன்னுரிமை அளித்தவர். எந்த ஒரு செயலையும் குடும்பத்தாரிடம் சென்று விவாதித்து பின் முடிவுக்கு வருபவர். இலக்கியங்களில் சொல்லப்பட்ட செய்திகள் போல குடும்பத்தில் உள்ள தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா இவர்கள் எந்த ஒரு முடிவு எடுத்தாலும் கலந்து ஆலோசித்து முடிவு எடுத்தால் அது அந்தக் குடும்பத்தைச் சிறப்பானதாக மாற்றி அமைக்கும். தவிர அக்குடும்பத்தில் உள்ள இளைஞர், இளைஞி இவர்களிடமும் அச்செய்தி சென்று சேர வேண்டும். அப்போது குடும்பம் பிரகாசமாக விளங்கும். அம்மாதிரி குடும்பங்களே பெரிய சமூக மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

## References

Balakumaaran, (2002) Gangaikonda Cholan, Visa Pathippagam, Chennai, India.

Balakumaaran, (2013) Udayar, Visa Pathippagam, Chennai, India.

Rasamanikanar, M. (2016) Cholar varalaru – 2, Maruthamalai Pathippagam, Coimbatore, India.

Sadasiva Pandarathar, T.V. (2010) Pirkaala Cholar Varalaru, Sairam Pathippagam, Chennai, India.

Sadasiva Pandarathar, T.V. (2011) Pirkaala Cholar Sarithiram, Sairam Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License